**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2014**

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுத் திறைசேரிச் செயலாளர் மற்றும் கமத்தொழில், காணி மற்றும் வனவள அமைச்சுச் செயலாளர், தாவரவியல் பூங்கா பணிப்பாளர், பொதுத் திறைசேரியின் பாதீட்டுப் பணிப்பாளர் மற்றும் கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் என்பவர்களுக்கு இடையே 1996 திசெம்பர் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் (4)(ஜே) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தாவரவியல் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்குகளைச் சமர்ப்பித்தலில் குறைபாடு

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் ஐந்தொகையைத் தயாரிக்கும் போது சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் திரவத்தன்மை ஒழுங்குமுறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 யூன் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக ரூபா 53,650 ஆன தொங்கல் கணக்கு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதனைத் தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) அட்டுறு செலவினப் பேரேட்டுக் கணக்கைப் பரிசோதித்த போது, ஆண்டின் ஆரம்ப மீதி மற்றும் ஆண்டினுள் கடப்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 8,872,644 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட தொகை விடுவிப்பு ரூபா 4,207,535 ஆக இருந்தமையால் மேலும் விடுவிக்கப்பட வேண்டிய மீதி ரூபா 4,665,109 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,982,251 ஆக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 317,142 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் தொழிற்பாட்டு நட்டக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த விற்பனைப் பொருட்களின் கிரயம் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த விற்பனைப் பொருட்களின் கிரயம் முறையே ரூபா 108,348 மற்றும் ரூபா 116,151 தொகைகளாக இருந்தமையால் அம்மீதிகளுக்கிடையே ரூபா 7,803 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் உத்தரவாதக் காலம் கடந்திருந்த போதிலும், தீர்க்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 04 ஒப்பந்தங்களின் நிறுத்த வைத்தல் தொகைகளின் பெறுமதி ரூபா 1,344,109 ஆக இருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 92,916,624 மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 89,368,125 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,548,499 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் 06 செலவின விடயங்களின் செலவினம் ரூபா 18,192,526 ஆன அளவினால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கு ஒப்பாக 02 வருமான விடயங்களில் ரூபா 20,323,872 ஆல் அதிகரித்தமையால் செலவினங்கள் அதிகரிப்பினை விட கூடிய பெறுமதியில் வருமானம் அதிகரித்தமை மிகை அதிகரிப்பது தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

நிதியம் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு ஆவணத்தின் மூலம் தாவரவியல் பூங்காவின் வருடாந்த நுழைவுச்சீட்டு வருமானத்தில் 25 சதவீதமான தொகை தாவரவியல் பூங்கா நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென சட்டமாக்கப்பட்டிருந்த போதிலும், உழைக்கப்பட்ட மொத்த வருமானமும் திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. திறைசேரியினால் வருடாந்தம் வழங்கப்படும் பணம் உழைக்கும் வருமானத்தில் 25 சதவீதத்தை விட குறைவாக இருப்பதால் அவ்வேறுபாடு பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த அட்டுறு வருமானம் 1997 ஆம் ஆண்டிலிருந்து திரண்டுவரும் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 50,401,172 ஆக இருந்தது. வருமானத்தைக் கணக்கீடு செய்யும் போது அவை நிச்சயமாக கிடைப்பதாக உறுதியாக அறிந்துகொண்டு கணக்கீடு செய்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் 03 செயற்பாடுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,685,000 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 1,505,843 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி,

பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 179,157 தொகையானதுடன் இது ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 01 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்தப் பாதீடு இரண்டு முறை திருத்தப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த சில செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2006 ஆம் ஆண்டின் பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2013 மார்ச் 08 அந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் பின்வரும் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 மார்ச் 20 அந் திகதி வரையிலும் அப்பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படும் வரை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்குகள் பரீட்சிக்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சு மாற்றமடைந்ததால் பொறுப்புச் சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மூன்று பேராக குறைவடைந்திருந்தமையால் அதன் பிரகாரம் அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீதான விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு